பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ [illegible] ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் [illegible]

மலர்: 20] சென்னை: புரட்டாசி 5 (21—9—72) வியாழன் வெளியூர்: புரட்டாசி 6 (22—9—72) வெள்ளி [இதழ்: 83

உற்பத்தியின் தரம் உயரவில்லையாம்-- சி. சுப்பிரமணியம் கூறுகிறார்

புதுடில்லி, செப். 21—

"பத்து ஆண்டுகளுக்கு முன்பு நம் நாட்டில், 36,000 சிறுதொழிற் சாலைகள் இருந்தன; இப்போது இந்த எண்ணிக்கை 3-இலட்ச மாக உயர்ந்திருக்கிறது; ஆனால் அதற்கேற்ற வகையில், இவைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் தரம் உயரவில்லை" என்று மத்திய தொழில் வளர்ச்சித் துறை அமைச்சர் சி. சுப்பிரமணியம் கூறியிருக்கிறார்.

மாறுதலற்ற கல்வியால் பயனில்லை

பழைய முறையில் ஓட்டிச் செல்வது நாட்டின் அழிவுக்கே வழிகோலும்

எந்த வேலைக்கும் தகுதியற்றோர் எண்ணிக்கை அதிகரிக்கும் அபாயத்தைத் தடுத்து நிறுத்தக் கல்வித் துறை நிபுணர்கள் முன்வர வேண்டும்

கல்லூரிக் கட்டடத் திறப்பு விழாவில் முதல்வர் கலைஞர் வலியுறுத்தல்

ஐதராபாத், செப். 21—

"அலுவலகங்களில் 'கீழ்ப்படிதலுள்ள குமாஸ்தா'க்களாகப் பணிபுரிவதற்கு மட்டுமே பயன்படும் பழைய பிரிட்டிஷ் கல்வி முறை, நம்முடைய இன்றைய தேவைக்குப் பொருந்தாத ஒன்றாகும்.

"கல்வி பற்றி அண்மையில் எழுதப்பட்டுள்ள நூல் ஒன்று என் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது; அந்நூலின் ஐந்தாம் பகுதிக்கு--விசித்திரமான முறையில்--'செயல் இல்லாத கல்வி' என்று தலைப்புத் தரப்பட்டிருந்தது; 'ஒரு காலத்தில் கல்வி எவ்வாறு செயல்பாடு கூடியதாக இருந்தது--காலத்துக்கேற்ற மாறுதல் இல்லாமல் இருந்ததால் இப்போது அது எவ்வாறு செயல்படாமல் இருக்கிறது--மாறிய காலத்திற்கு ஏற்ப அது மாற்றியமைக்கப்படாவிட்டால் ஏற்படும் அபாயங்கள் என்னென்ன' என்பது பற்றியெல்லாம் அதில் விளக்கப்பட்டுள்ளது.

"மாறுதல் இல்லாமல் பழைய முறையிலேயே தொற்றிக்கொண்டிருப்போமானால், வேலை இல்லாமல் இருப்பவர்களைவிட, வேலைக்கு இலாயக்கற்றவர்களை அதிக அளவில் உருவாக்கும் நிலை ஏற்பட்டுவிடும்; வேலைக்கு இலாயக்கற்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே போனால், அதனால் சமுதாயத்திற்குப் பெரும் அழிவு ஏற்படும்; இந்த அபாயத்தைத் தடுக்கக் கல்வித் திட்ட நிபுணர்கள்--பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள்--பேராசிரியர்கள் ஆகியோர் பாதுகாப்பான வழிகள் காண்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், ஐதராபாத்தில் திருமதி சத்தியபாமா நரசிம்ம ராவ் மகளிர் கல்லூரியின் புதிய கட்டடத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் தெளிவுறச் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்; அவர் ஆற்றிய உரையின் முக்கியப் பகுதி வருமாறு:—

"நம் வருங்காலம் உருவாக்கப்படுவதில் கல்லூரிகள் ஆற்ற வேண்டிய பங்கு பெரியது; அவை அறிவின் நவீன கோட்டங்களாகும்.

இந்த நூற்றாண்டில், நெருக்கடியான ஒரு காலத்தை நாம் கடந்து வந்துகொண்டிருக்கிறோம்; ஒருவரையொருவர் புரிந்து கொள்ளாமையால்--பண்பாடு இல்லாமையால மனிதனுடைய கண்ணியம் பாதிக்கப்படுகிறது.

எங்கள் மகத்தான தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களின் 64-வது பிறந்த நாளை நாங்கள் இப்போது கொண்டாடிவருகிறோம்; கடமை--கண்ணியம்--கட்டுப்பாடு என்ற முப்பெரும் தாரக மந்திரங்களை அவர் எங்களுக்கு அளித்திருக்கிறார்; எந்த ஓர் உண்மையான நாகரிகமாயினும், அதன் உரைக்கல்லாக விளங்கக்கூடியவை இவைகளேயாகும்!

திட்டங்களை வகுத்து அதை நிறைவேற்றியவர்களுக்கு நாம் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம்; ஆனால் எதிர்பாராத விதமாக அவர்களுடைய நல்ல எண்ணங்களினால நிறைவேற்றப்பட்ட திட்டங்களினால் பெரும் வேலையில்லாத் திண்டாட்டம் உருவாகி விட்டது.

படிக்காதவர்கள் வேலையில்லாமல் இருப்பதைவிட படித்தவர்கள் வேலையில்லாமல் இருப்பது பெரும் பிரச்சினையாக உள்ளது.

பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புக் கொடுப்பதற்காக மேலும் மேலும் புதிய வேலைகளை உருவாக்குவதில்எங்களால்இயன்ற வரையில் முயன்று வருகிறோம்.

ஒரு வேலைக்குப் பொருத்தமான வகையில் பட்டதாரிகளை உருவாக்கப் பல்கலைக் கழகங்களும் தங்களுடைய கல்வி முறையையும்--பாடத் திட்டங்களையும் மாற்றி யமைத்துக்கொள்ள வேண்டும்.

மாணவர் சமூகமும் இத்துறையில் ஆக்கப்பூர்வமான பங்கினை ஆற்றிட வேண்டும்.

தமிழ்நாட்டில் நாங்கள் இளைஞர் அணி அமைத்துள்ளோம்; இத்திட்டத்தின் மூலம், வேலை இல்லாத பட்டதாரிகளுக்குக் கிராமப்புற வளர்ச்சியில் பயிற்சி அளிக்கப்படுகிறது; இந்தத் திட்டம் பெரும் வெற்றியடைந்திருக்கிறது.

ஒரு மாணவருக்கு ஆக்கப்பூர்வமான பணியை ஒதுக்கிக் கொடுத்துவிட்டால், அவர், நாட்டின் சொத்தாக மாறிவிடுவார் என்பதில் எனக்கு நிலை

(4-ம் பத்தி பார்க்க)

(2-ம் பத்தித் தொடர்ச்சி)

யான நம்பிக்கை உண்டு.

அடுத்த 12 ஆண்டுகளில் கல்வித் துறையில் புத்துணர்ச்சி ஏற்படுத்தத் தமிழகத் திட்டக் குழு ஏற்பாடு செய்து வருகிறது.

இதன்படி, கல்வி கற்க உரிமை உள்ளதுபோல், வேலை பெறுவதற்கும் உரிமை உண்டு; ஆகவே, கல்வியின் பல்வேறு கட்டங்களைச் சமூகத்தின் தொழில் நுணுக்கத் தேவைகளுடன் ஒட்டியதாக இருக்கச் செய்வதற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்துவருகிறோம்.

இதுபோன்ற உறுதியான திட்டங்களினால், இன்றையக் கல்வி முறைக்கும் பரிகாரம் காண முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்."

மத்திய அரசு ஊழியர்களுக்கு இடைக்கால நிவாரணம்

விலைவாசிகள் உயர்ந்ததன் எதிரொலி

புதுடில்லி, செப். 21—

விலைவாசிகள் உயர்ந்துவிட்டதால் மத்திய அரசு ஊழியர்களுக்கு இடைக்கால நிவாரணம் அளிக்க வேண்டும்" என்று மூன்றாவது ஊதியக் குழு சிபாரிசு செய்திருந்தது; இந்தச் சிபாரிசை மத்திய அரசு ஏற்றுக்கொண்டு விட்டது.

இதன்படி, ரூ. 575 வரை அடிப்படைச் சம்பளம் வாங்குகின்றவர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கப்படுகிறது.

இந்த இடைக்கால நிவாரணம் 1972 ஆகஸ்டு 1-ந் தேதி முதல் கிடைக்கும். இராணுவம் படையினருக்கும், மத்திய ஆட்சிப் பகுதி நிர்வாகங்களைச் சேர்ந்த ஊழியர்களுக்கும் இந்த நிவாரணம் உண்டு.

வாழ்க்கைச் செலவு 238 புள்ளிகளை எட்டியதன்மீது மூன்றாவது ஊதியக் குழுவைக் கலந்தாலோசித்து அரசு இவ்வாறு முடிவு செய்தது.

இந்த இடைக்கால நிவாரணத்தால் மத்திய அரசுக்கு முழு ஆண்டுக்கு ரூ. 36 கோடியும், நடப்பு ஆண்டில் ரூ. 21 கோடியும் கூடுதலாகச் செலவாகும்.

ரூ. 85-க்குக் குறைவாகச் சம்பளம் வாங்குகிறவர்களுக்கு ரூ. 7 உயர்வு.

ரூ. 85 முதல் 209 வரை சம்பளம் வாங்குகிறவர்களுக்கு ரூ. 8 உயர்வு.

ரூ. 210 முதல் 575 வரை வாங்குபவர்களுக்கு (சில மாறுதல்களுக்கு உட்பட்டு) ரூ. 10 உயர்வு.

'பண முதலைகளின் ஏகபோகம்'-- தொழில்துறையில் பெருகிச்செல்வதை எந்த மாநில அரசும் ஏற்க இயலாது

தொழில் வளர்ச்சி பெருக ஒரே வழி--மத்திய அரசுக்கு தமிழகத் தொழிலமைச்சர் செ. மாதவன் வலியுறுத்தல்

புதுடில்லி, செப். 21—

'தொழில் துறையில் பெரும் பணக்காரர்களின் ஏகபோகத்தைக் குறைக்கும் பிரச்சினையில் மத்திய அரசு தெளிவான கொள்கையை வகுக்க வேண்டும்; பெரிய தொழிலதிபர்கள், தங்கள் தொழிற்சாலைகளை மேலும் மேலும் பெருக்கிக் கொண்டு போவதை எந்த மாநில அரசும் ஆதரிக்காது; ஆனால், இப்படிப்பட்ட தொழில் அதிபர்களிடம் திறமையான நிர்வாக வசதிகள் – பண வசதி – விற்பனை வசதி – தொழில் நுட்ப வசதி ஆகியவை நிரம்ப உள்ளன என்பதை நாம் மறுக்கமுடியாது; இத்தனை வசதிகள் தொழில் அதிபர்களுக்கு இருக்கும்போது, அவர்கள் தொழில்களைப் பெருக்குவதைச் சட்டம் போட்டுத் தடுப்பதில் மட்டும் பயன் இல்லை; எனவே பெரும் தொழில் அதிபர்களின் தொழிற்சாலைகளை அரசாங்கம் ஏற்று நடத்தவேண்டும்; இப்படிச் செய்வதால் தொழில் துறையில் ஏகபோகமும் குறையும் – தொழில் வளர்ச்சியும் இருக்கும்"

என்று தமிழ்நாடு தொழில் அமைச்சர் செ. மாதவன் அவர்கள், புதுடில்லியில் நடைபெற்ற மாநிலத் தொழில் அமைச்சர்கள் மாநாட்டில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டி வலியுறுத்தினர்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

(இதன் தொடர்ச்சியை 4-ம் பக்கத்தில் காண்க)

அண்ணன் பெயரால் எழுப்பப்படும் ஐயம்

மனச்சாட்சி அளிக்கும் விடையைப் பொறுத்ததே இலட்சிய வெற்றி

கழகத் தலைவர் கலைஞர் கருத்து விளக்கம்

"உடன் பிறப்பே -- ஒற்றுமைக்கு வழி வகுப்பாயா ? வேற்றுமைக்கு விதை தெளிப்பாயா ?

" கடமையாற்றக் கண் விழிப்பாயா ? கயமை புகுந்திடக் கதவு திறப்பாயா ?

" அண்ணன் பெயரால் இந்த ஐயப்பாடுகளை எழுப்புகிறேன் -- அண்ணன் பிறந்த நாளில்; இதற்கு உன் மனச்சாட்சி அளிக்கும் விடையை பொருத்ததே நமது இலட்சியத்தின் வெற்றி "

என்று கழகத் தலைவர் கலைஞர் அவர்கள், 'முரசொலி' அண்ணா மலரில், 'உன்னையே நீ எண்ணிப் பார்' என்ற தலைப்பில் எழுதியுள்ள கட்டுரையில் வினா ஒன்று எழுப்பி கழகத் தோழர்களின் கடமைக்கு அறைகூவல் விடுத்துள்ளார்; அக்கட்டுரை வருமாறு:—

" பூமிக்கடியில் தங்கம் இருக்கிறது; அணிமணிகள் செய்து ஆரணங்குகளுக்குப் பூட்டி அழகோவியமாக்குகிறார்களே -- அந்தத் தங்கத்தையல்ல நான் குறிப்பிடுவது!

மழலை சிந்தும் குழவிகளுக்கு மணிமார்பிலே உருண்டிடப் பதக்கம் செய்யப் பயன்படுத்துகிறார்களே -- அந்தத் தங்கத்தையல்ல நான் உனக்கு நினைவூட்டுவது!

நமது தங்கம் -- தமிழ்த் தங்கம் -- காணக் கிடைக்காத தங்கம் -- ஏழைக்கும் எளிதில் கிடைத்திட்ட தங்கம்--இன்னுமா உனக்குப் புரியாமல் இருக்கும் ?

வங்கக் கடலோரம் புதைந்திருக்கும் அந்தத் தங்கம், புறவொளி காட்டிப் பொன் முறுவல் செய்யும் தங்கமல்ல -- அகவொளி வழங்கிடும் அறிவுத் தங்கம்!

அந்தத் தங்கத்தைப் பறிகொடுத்து ஆண்டுகள் நான்கு ஓடிவிட்டன; இல்லை -- இல்லை; பறிகொடுக்கவில்லை; யாராலும் நம்மிடமிருந்து அந்த ஒளிப் பிழம்பைப் பறித்துக்கொள்ள முடியாது!

நகைமுகம் காட்டி நம்மை அரவணைத்த தங்கம் அது! பகைவர்க்கும் அருள்புரிந்து ஆதரவு நல்கும் தங்கம் அது! நம்மை ஒரே குடும்பமாக ஆக்கிய தங்கம் அது!

நம் மொழிக்கு ஆக்கமளித்த தங்கம் -- நம் உணர்வுக்கு ஊட்டம் தந்த தங்கம்--புனலிடை மூழ்கிப் பொழிலிடை உலவிய தமிழர்தம் தரணி, புழுதியில் மூழ்கிப் புயலிடை உருமாறியது கண்டு உள்ளம் வெதும்பிய தங்கம்! 'வாய்ப்பேச்சு நாட்டைக் காக்காது' எனக் கூறி, வலிவிழந்த தாயகத்தை நிமிர்ந்து நிற்கச் செய்த தங்கம்!

அந்தத் தங்க ஒளி தமிழகமெங்கும் நின்று நிலவிட ஆண்டுதோறும் என்றல்ல -- அனுப்பொழுதும் விணுக்காமல் பணி புரிகின்றோம்!

நம் பணியின் வெற்றி விளைவுகளைக் கணக்கிட்டு--மேலும் தொண்டாற்ற இதயத்தில் தெம்பு ஏற்றிக்கொள்ளத்தான் இந்த ஒரு நாளில் விழா எடுக்கிறோம்!

ஒளியுமிழும் இந்நாளில், உன்னிடம் ஒன்றிரண்டு கேட்டிட வினவுகிறேன் -- உரிமையின் காரணமாக! உனக்கும் எனக்குமுள்ள 'ஒரு தாய் வயிற்றுப் பிள்ளை' என்ற உறவின் அடிப்படையில்!

உடன் பிறப்பே -- நீ ஒவ்வொரு நாளும் காலையில் கண் மலர்ந்து எழும்போது என்ன புதிய சிந்தனையோடு எழுகிறாய்; என்ன பொலிவுமிகு திட்டங்களோடு எழுகிறாய் -- கொஞ்சம் எண்ணிப்பார்!

'உன்னையே நீ எண்ணிப் பார்' என்று உலகச் சிந்தனையாளன் சாக்ரடீஸ் உரக்கக் கூவினானே -- அதற்கொப்ப உன்னையே நீ எண்ணிப் பார்!

நீ ஒரு அமைச்சராக இருந்தால், 'இன்றைக்கு மக்களுக்கென என்னென்ன திட்டங்கள் தீட்டலாம்' என்று எண்ணுவாயா அல்லது, 'நேற்று எடுத்த முடிவுகள் எந்த அளவுக்கு நிறைவேற்றப்பட்டுள்ளன' என்ற கணக்கினை அறிந்திடுவாயா? இதில் எதனை முதலில் செய்வாய்?

நீ ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தால், உன் தொகுதியில் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள்--மேலவை உறுப்பினர்களுடன் தொடர்பு கொண்டு டெல்லியில் எதிரொலிக்க வேண்டிய கருத்துக்களைச் சேகரிப்பாயா? அல்லது, 'அவர்கள் நம்மோடு தொடர்பு கொள்ளட்டும்' என்று எதிர்பார்த்து இருப்பாயா ?

நீ ஒரு சட்டமன்ற உறுப்பினராகவோ -- மேலவை உறுப்பினராகவோ--நகராட்சித் தலைவராகவோ--ஒன்றியத் தலைவராகவோ--ஊராட்சித் தலைவராகவோ--மாநகராட்சித் தலைவராகவோ--உள்ளாட்சி மன்றங்களின் உறுப்பினராகவோ இருந்தால் இன்றைக்கு நம் பகுதி மக்களின் பொதுத் தேவைகள் என்ன என்பதைக் கண்டறிந்து அதனை நிறைவு செய்ய ஓயாது பணியாற்றுவாயா? அல்லது, 'தேடிவரும் சிபாரிசுகளை கவனித்தால் போதும்' என வீட்டுக்குள் முடங்கிக் கிடப்பாயா ?

நீ தலைவர்களிலே ஒருவனாக இருந்தாலும்--தகுதிமிக்கப் பதவிகளிலே இருந்தாலும், 'இது, தொண்டர்களின் உழைப்பால் கிடைத்த வாய்ப்பு' என்று கருதுவாயா அல்லது, 'கிடைக்க வேண்டிய இடம் கிடைத்தது' என்று கித்தாப்பு மொழி பேசுவாயா?

உடன்பிறப்பே -- என்னைப்போல் நீ ஒரு தொண்டனாக இருந்தால், 'உன் கூட்டத்தில் ஒருவன்தான் உன் கட்டளைப்படி உன்னை வழி நடத்திச் செல்ல முன்னால் போய்க்கொண்டிருக்கிறான்' என்று என்னைப் பற்றி எண்ணிக்கொள்வாயா? அல்லது தூண்டிவிடுவோர் தூண்டிலில் மீனாகத் தள்ளிடத் துடிப்பாயா?"

பல இலட்சம் ரூபாய் மதிப்புள்ள உருக்கு

சோதனையில் கண்டுபிடிப்பு

புதுடில்லி, செப். 21—
மத்தியப் புலனாய்வுத் துறை நடத்திய சோதனை ஒன்றின் மூலம் சில கிடங்குகளில் பெரும் அளவில் உருக்கு பிடிபட்டது.

இந்த உருக்கு, சில இல்லாத நிறுவனங்களின் பெயராலும் -- பொய்யான சான்றேடுகளாலும் அல்லது இரண்டின் மூலமோ பெறப்பட்டிருந்தது; இப்மாதிரி பெறப்பட்ட உருக்கு கள்ளச் சந்தையில் அதிக விலைக்கு விற்கப்பட்டுவந்தது.

இந்தச் சோதனையில் பிடிபட்ட உருக்கு பல இலட்ச ரூபாய் மதிப்புள்ளவையாம்.

இதன் காரணமாகப் பதினறுபேர், மத்தியப் புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முதலமைச்சர் கலைஞர்--இராணுவ அதிகாரி பேச்சுவார்த்தை

சென்னைத் தீவுத் திடலில் (ஐலண்டு மைதானத்தில்) இராணுவத் துறையினருக்காகக் கட்டப்படும் கட்டடத்திற்குப் பதிலாக மாற்று இடம் ஒதுக்குவது குறித்து முதலமைச்சர் கலைஞர் அவர்களுடன் இராணுவத் துறை அதிகாரி லெப்டினென்ட் -- ஜெனரல் ராலே ஆலோசனை நடத்தினர்.

தீவுத் திடல் நகரின் மத்தியில் இருப்பதாலும் -- தூய்மையான காற்றோட்டம் -- சுகாதார வசதிகளைக் கருதி இங்கு கட்டடம் கட்டக் கூடாது என்று மாநில அரசாங்கம் எதிர்ப்புத் தெரிவித்திருந்தது நினைவிருக்கலாம்.

தீவுத் திடலில் கட்டடம் கட்டுவதற்குப் பதிலாக இராணுவத் துறையினருக்கு மாற்றிடம் ஒதுக்கத் தமிழக அரசு ஒப்புக்கொண்டிருக்கிறது; இது குறித்து முதல்வருடன் இராணுவத் துறை அதிகாரி விவாதித்தார்.

சென்னை நகர பஸ்களில் சீசன் டிக்கெட்டு

சென்னை, செப். 20—
சென்னை நகர பஸ்களில் செப். 25-ந் தேதிமுதல் குறைந்த தூரத்திற்கும் மாதாந்திர சீசன் டிக்கெட்டு வழங்கப்படும்.

இதுபற்றிப் பல்லவா போக்குவரத்துக் கழக மக்கள் தொடர்பு அதிகாரி பி. டி. இராமன் கூறியதாவது :—

" வருகிற 25-ந் தேதி முதல், சென்னை நகர பல்லவா போக்குவரத்துக் கழக நகர பஸ்களிலும்—புறநகர் பஸ்களிலும் மாதாந்திர சீசன் டிக்கெட்டு கொடுக்கப்படுகிறது.

இந்த டிக்கெட்டை வாங்கியவர்கள், எந்தப் பஸ்சில் வேண்டுமானாலும் ஒரு நாளைக்கு ஒரு தடவை குறிப்பிட்ட தூரத்திற்குப் போகலாம் -- அதேதூரத்திற்குத் திரும்பி வரலாம்.

20 காசு டிக்கெட்டு உள்ள குறைந்த தூரம்முதல் 65 காசு டிக்கெட்டு உள்ள அதிக தூரம் வரையில் இந்தச் சீசன் டிக்கெட்டுகள் கொடுக்கப்படும்.

20 காசு தூரத்திற்கு உரிய மாதாந்திர சீசன் டிக்கெட்டு கட்டணம் ரூ. 8 மட்டுமேதான்; ஒருவர் 20 காசு டிக்கெட்டு தூரத்திற்கு ஒரு நாளைக்கு போக வரப் பயணம் செய்தால் நாள்தோறும் 40 காசு ஆகும்; அதாவது மாதம் ரூ. 12 ஆகும்; இந்த சீசன் டிக்கெட்டு எடுப்பதன்மூலம் மாதம் ரூ. 4 மிச்சமாகும்.

இதில் இன்னொரு வசதியும் உண்டு; இந்த டிக்கெட்டைக் கொண்டு ஒரு குறிப்பிட்ட பஸ்சில் தான் போகவேண்டுமென்பதில்லை; எந்தப் பஸ்சில் வேண்டுமானாலும் ஒரு முறை போக வரப் பயணம் செய்ய அனுமதி உண்டு.

மாதாந்திர சீசன் டிக்கெட்டுக் கட்டணம், பயணம் செய்யும் தூரத்திற்குத் தகுந்தபடி கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது :—

நாள்தோறும் பயணச் சீட்டுக் கட்டணம்	மாதாந்திர சீசன் டிக்கெட்டுக் கட்டணம்
20 காசு	ரூ 8
25 காசு	ரூ 10
30 காசு	ரூ. 12
35 காசு	ரூ. 14
40 காசு	ரூ. 16
45 காசு	ரூ. 18
50 காசு	ரூ. 20
55 காசு	ரூ. 22
60 காசு	ரூ. 24
65 காசு	ரூ. 26

சீசன் டிக்கெட்டுகள் பல்லவா போக்குவரத்துக் கழக அலுவலகத்திலும், இராசா அண்ணாமலை மன்றத்திற்கு அருகிலும் உள்ள பஸ் நிலையத்திலும், பாரிமுனை பஸ் நிலையத்திலும் கிடைக்கும்.

மற்றும் அடையாறு— அம்பத்தூர்— அயனாவரம் — மாதவரம்— பட்டுல்லா சாலை — சென்ட்ரல் (தெற்கு), சென்ட்ரல் (வடக்கு), வடபழனி ஆகிய பஸ் நிலையங்களிலும் டிக்கெட்டு விற்கப்படும்.

தொழிலாளர் நலத்துறை அமைச்சர்

என். வி. நடராசன்

நிகழ்ச்சிகள்

செப். 22 மாலை 6-15 மணி: அரக்கோணம்; 6-30 மணி: பரமேஸ்வரமங்கலம் பட்டா வழங்கும் விழா; இரவு 7-30 மணி: மேலம்புலம் புதூர் அண்ணா பிறந்த நாள் விழா.

தமிழ் இனத்துக்குப் பெரியவர்களின் தொண்டு!

சென்னை, செப். 20—
" இளந் தமிழர்களுக்கும் – கிழத் தமிழர்களுக்கும் உள்ள நிலையை விளக்கமாகச் சில புச் செல்வர் சொன்னார்; அவர் பேசுவதற்கேற்ப கவிஞர் கு. சா. கிருஷ்ணமூர்த்தி, இந்த ஏட்டில் ஒரு கவிதை எழுதி, அதில், 'பெருந் தலைவர்களை நம்பி இனிம் பயனில்லை; இளம் தமிழர்கள் எழவேண்டும்' என்று எழுதியிருக்கிறார்.

" புதிய மட்டைகள் தென்னையில் தோன்றுகின்ற நேரத்தில் -- புதிய மட்டைகள் வளர்ந்த பிறகு -- பழைய மட்டைகள் வீழ்கின்றன; என்ற அழகான உதாரணத்தை சிலம்புச் செல்வர் சொன்னார்; அந்த மட்டைகள் அப்படி வீழ்ந்துவிட்டாலும் ஒவ்வொரு மட்டையும், வீழ்ந்த இடத்தில் -- தான் இருந்த இடத்தை நினைவுபடுத்தித் தென்னை மரத்தில் வடுக்களை உண்டாக்கிவிட்டுப் போகின்றன.

" அந்த வடுக்கள், வருங்காலத்தில் மேலே ஏறித் தேங்காய்களைப் பறிக்கவோ – தேவையானவற்றை தென்னையிலிருந்து எடுத்துக் கொள்ளவோ மனிதர்கள் கால்வைக்க உதவும் படிக்கட்டுகளாக அமைகின்றன; அந்த வகையில், வீழ்ந்து விடுகின்ற கிழத் தமிழர்கள் அப்படிப்பட்ட தென்னை மரத்தின் வடுக்களாக இருக்க வேண்டும்; அதுதான் தியாக உள்ளத்தோடு இந்த இனத்திற்கு நாம் அனைவரும் செய்யவேண்டிய தொண்டாகும்."

—முதலமைச்சர் கலைஞர்

('இளந்தமிழன்' ஏடு வெளியீட்டு விழாவில்)

தமிழ்நாட்டில் 1,20,000 ஆண்களுக்கு அறுவை சிகிச்சை

குறிக்கோளை அடைவதில் தீவிரக் கவனம்

பிறப்பு எண்ணிக்கையைக் குறைப்பதற்கான புது உத்தியின் ஒரு பகுதியாகப் பல்வேறு மாநிலங்களில் ஆண்களுக்கான அறுவைச் சிகிச்சை முகாம்கள் அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

முதல் கட்டமாகத் தமிழ்நாடு -- அரியானா -- உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில், செப்டம்பர் -- அக்டோபர் மாதத்தில் அறுவைச் சிகிச்சை முகாம்கள் செயல்படும்.

தமிழ்நாட்டில்தான் மிக அதிகமான எண்ணிக்கை உள்ள முகாம்கள் இருக்கும்; திருச்சி, வட ஆற்காடு, நெல்லை, இராமநாதபுரம், செங்கற்பட்டு, கோவை ஆகிய மாவட்டங்களில் அமைக்கப்படும் இந்த முகாம்கள் மொத்தப் 1,20,000 ஆண்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யும் குறிக்கோளுடன் இயங்கும்.

" சிறந்த வகையில் அறுவைச் சிகிச்சை செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் அக்கறை காட்டுவதுடன், மக்கள் தொகைப் பிரச்சினையில் நாம் அடைய வேண்டிய குறிக்கோளை எட்டுவதற்காகச் சிகிச்சைக்கான ஆண்களைத் தேர்ந்தெடுப்பதிலும் கவனம் செலுத்த வேண்டும்" என்று மத்திய சுகாதார--குடும்பக் கட்டுப்பாட்டு அமைச்சகம், மாநில அரசுகட்கு யோசனை கூறியிருக்கிறது.

இந்த அறுவைச் சிகிச்சை செய்து கொள்பவர் யாவரும் முகாம்களில் இரண்டு நாட்கள் தங்கி தேவையான மருத்துவ வசதி பெறுவார்கள்; இந்த முகாம்களில் நடைபெறும் ஒவ்வொருவருடைய அறுவைச் சிகிச்சைக்கு மத்திய அரசு ரூ. 100 ரொக்கமாக அளிக்க அனுமதி வழங்கியுள்ளது; இதில் ரூ. 10 மருந்துகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

மத்திய நிறுவனத்தின் மீது குற்றச்சாட்டு

முந்திரிக் கார்ப்பரேஷன் தலைவர் குமுறல்

கொல்லம், செப். 19—
கேரள அரசின் முந்திரி வளர்ச்சிக் கார்ப்பரேஷனுக்குச் சொந்தமான 25 முந்திரித் தொழிற்சாலைகளில் 23 மூடப்பட்டுவிட்டன.

"இந்தத் தொழிற்சாலைகள் மீண்டும் திறக்கப்படுமா என்பது உறுதி இல்லை" என்று ஓர் அதிகாரி கூறினார்; மற்றிரு ஆலைகளும் இன்னும் ஒரு வாரத்துக்கு வேலை செய்யும்.

இந்த 25 முந்திரி ஆலைகளிலும் சுமார் 26,000 தொழிலாளர் வேலை செய்கின்றனர்.

" இந்தத் தொழிலில் அரசுத் துறையிலுள்ள ஓர் நிறுவனமான கேரள முந்திரி வளர்ச்சிக் கார்ப்பரேஷனை ஒதுக்கித் தள்ளிவிட இந்திய முந்திரிக் கார்ப்பரேஷன் முயற்சிக்கிறது" என்று அதன் தலைவர் குற்றஞ்சாட்டினர்.

கா. காளிமுத்து எம்.எல்.ஏ.

நிகழ்ச்சிகள்

செப். 22: எரியோடு; 23: முகவூர்; 24: மதுரை; 25: குன்னத்தூர்; 26: கோவை; 27, 28: சிவகாசி; 29: கோவில்பட்டி வட்டம்; 30: கருங்காலக்குடி.

அக். 2: இராமேசுவரம்; 5: ஆண்டிபட்டி.

கூட்டுறவு மனப்பான்மை நாட்டிற்கு அவசியம்

மக்களின் வாழ்க்கைத் தரம் உயர அதுவே சிறந்த வழி

முயற்சி இல்லாவிட்டால் வீழ்ச்சிதான் நேரிடும்

காஞ்சிபுரம், செப். 21—
" பொருளாதாரம் வளருவதற்குக் கூட்டுறவு முறைகள் சிறந்ததாகும்; எல்லா வகைகளிலும் கூட்டுறவுத் துறையின் மூலம் பாடுபட்டால் வாழ்க்கைத் தரத்தை ஓரளவுக்கு நம்மால் உயர்த்திக்கொள்ள முடியும்; நம்முடைய நாட்டில் இது வெற்றி பெறாமல் இருப்பதற்குக் காரணம் -- இங்கு கூட்டுறவு அமைப்பு இருக்கிறதே தவிர, கூட்டுறவு மனப்பான்மை இல்லாமல் இருப்பதுதான்! கூட்டுறவு மனப்பான்மை இல்லாதவர்களின் கையில் கூட்டுறவுமுறை இருந்தால் அது சரிவர வளராது!

" மிக மிகச் சாதாரண நாடுகளெல்லாம் பொருளாதாரத்தில் உயர்ந்து நிற்கும்போது, 56 கோடி மக்களைக் கொண்ட இந்தியா ஏன் வாழ்க்கைத் தரத்தில் பின்தங்கி இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

பெல்ஜியம் -- ஆலந்து நார்வே போன்ற நாடுகளிலெல்லாம் பெரும் பணக்காரர்கள் இல்லை; நடுத்தர மக்கள்தான் அங்கெல்லாம் இருக்கின்றனர்; ஆனால் ஒவ்வொருவரும் 120 கூட்டுறவு கழகங்களுக்கு இயக்குநர்களாக இருக்கின்றனர்; அரசிடம் கடனே வாங்காமல் அவர்களே மூலதனத்தைப் போட்டு, வருவாயையும் -- ஊதியத்தையும் பெருக்கிக் கொள்கின்ற அளவுக்கு மிக சிறந்து விளங்குகின்றார்கள்; அந்த நிலையை நாமும் அடைய இங்குள்ளவர்கள் அதற்கான முயற்சியில் ஈடுபடவேண்டும்; முயற்சியே செய்யாமல் இருந்தால் எதையும் வெற்றிகரமாக செய்ய இயலாது.

" கூட்டுறவு முறையின் மூலமாகத்தான் விலைவாசியை ஓரளவுக்குக் கட்டுப்படுத்த முடியும்; வியாபாரிகள் அதிக கொள்ளை இலாபம் சம்பாதிப்பதைத் தடுப்பதற்கு ஒரே வழி கூட்டுறவு முறைதான்!"

--- நாவலர் இரா. நெடுஞ்செழியன்

(அறிஞர் அண்ணா பட்டுக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனைக் கழகத்தில்)

அயல் நாடுகளில் பயிலும் மாணவர்கள்

புதுடில்லி, செப். 19—
பிரிட்டனிலும் மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் கல்வி பயின்று வரும் மாணவர்கட்கு அளிக்கப்படும் அந்நியச் செலாவணித் தொகையை அதிகரிப்பதென்று இந்திய அரசு முடிவு செய்திருக்கிறது.

ஆனால், அமெரிக்கா, கனடாவில் படிப்பவர்கட்கு இந்த உயர்வு கிடையாது.

இவ்விரு நாடுகளையும் தவிர மற்ற நாடுகளில் படிக்கும் மாணவர்கட்கு இப்போது 6,000 பவுன் (ரூ. 10,800) அனுமதிக்கப்பட்டிருக்கிறது: இனி அவர்கட்கு 7,000 பவுன் (ரூ 12,000) அளிக்கப்படும்.

தலைமைக் கழக அறிவிப்பு

காஞ்சி நகர தி. மு. க. கிளை செயலாளர்--துணைச்செயலாளர் தேர்தல்

8--10--72 ஞாயிறன்று நடைபெறும்

காஞ்சி நகர தி. மு. க. கிளைச் செயலாளரும், துணைச் செயலாளரும் சொந்த வேலைகளின் காரணமாகத் தங்கள் தங்கள் பொறுப்புக்களிலிருந்து விலகிக் கொண்டதைத் தலைமைக் கழகம் முறைப்படி ஏற்றுக்கொண்டது.

அதற்கேற்ப, காஞ்சி நகர தி. மு. க. செயலாளர், துணைச் செயலாளர் ஆகிய பொறுப்புக்களுக்கான தேர்தலை 8–10–72 ஞாயிறன்று முறைப்படி நடத்துவதற்குச் செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. செயலாளர் தோழர் கே. டி. எஸ். மணி அவர்களுக்குத் தலைமைக் கழகம் அனுமதி அளித்திருக்கிறது.

'அறிவகம்', சென்னை-18
18—9—1972

என். வி. நடராசன்,
துணைப் பொதுச் செயலாளர் தி. மு. க.

பெற்ற சுதந்தரத்தை அனுபவித்தவர் யார்?

ஏழை எளியவர் நிம்மதியாக வாழ வழியுண்டா?

கும்பகோணம், செப். 20—
" கடந்த 1947 முதல் இன்று வரையில்--வெள்ளி விழா உட்பட கொண்டாடப்பட்டது வரையில் -- இந்தியச் சுதந்தரத்தை அனுபவித்துக்கொண்டிருக்கிறோம்; ஆனால் சுதந்தரம் என்பது, 'பெற்றுவிட்டோம்' என்பதோடு தீர்ந்துவிடுவதில்லை; பெற்ற பிறகும் அதனுடைய பலன்களை நாட்டு மக்கள் பகிர்ந்து அனுபவிக்கிறார்களா என்கின்ற கேள்விக்குக் கிடைக்கின்ற சரியான விடைதான், சுதந்தரத்திற்குச் சரியான பொருள் விளக்கமாகும்; அந்த விளக்கம் நமக்குக் கிடைத்திருக்கிறதா -- இந்தக் கேள்விக்குச் சரியான விடை நமக்குக் கிடைத்திருக்கிறதா என்றால், இல்லை!

" 25 ஆண்டுக்காலச் சுதந்தரத்தை யாரோ சிலர்தான் அனுபவிக்கிறார்கள்! இந்த நாட்டிலே அனாதைகளாக -- திக்கற்றவர்களாக--நசுக்கப்பட்டவர்களாக -- ஒடுக்கப்பட்டவர்களாக -- அன்றாடம் காய்ச்சிகளாக -- அரிசன மக்களாக -- அழுத்தப்பட்டவர்களாக -- பிற்படுத்தப்பட்டவர்களாக உள்ள மக்களுக்காகப் பெறப்பட்ட சுதந்தரம் அவர்களுக்குப் பயன்பட்டதா என்றால் இல்லை! வேதனையோடு ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டு -- வெட்கத்தால் தலைகுனிந்து கொள்ளும் அளவுக்குப் பூமி மாதாவைப் பார்த்து, 'பயன்படவில்லை' என்று சொல்லித் தீரவேண்டிய அளவிலேதான் இந்தச் சுதந்தரத்தை நாம் அனுபவித்துக்கொண்டிருக்கிறோம்!

" இதில் யாரையும் ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டிப் பயன் இல்லை, 'அனைவருமே குற்றவாளிகள்' என்பதை ஒப்புக்கொண்டு, இவற்றையெல்லாம் சரி செய்ய -- ஏற்பட்டுவிட்ட கட்டங்களைத் தாண்டிட -- இடையூறுகளிலிருந்து மக்கள் விடுபட-- ஏழை எளியவர் நிம்மதியாக வாழ -- உழைக்கின்றவர்கள் உழைப்புக்கேற்ற பயனைப் பெற்றிட நாம் உறுதி அளித்திட வேண்டும்."

---முதலமைச்சர் கலைஞர்

(குடந்தை பட்டா வழங்கு விழாவில்)

தெ.ஆ. மாவட்டத்தில் வறட்சிப் பகுதிகள்

குடிநீர்க்கிணறுகளை ஆழப்படுத்த ரூ. 1 இலட்சம்

சென்னை, செப். 20—
தென் ஆற்காடு மாவட்டத்தில் திண்டிவனம், செஞ்சி ஆகிய 2 தாலுகாக்களும், 'வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகள்' என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இத்தகவலை, தென் ஆற்காடு மாவட்ட கலெக்டர் ஆர். சண்முக சிகாமணி, கடலூரில் நிருபர்களிடம் அறிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

"வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள திண்டிவனம், செஞ்சிதாலுகாக்களில் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்த அரசாங்கம் ரூ. 1 இலட்சம் ஒதுக்கியிருக்கிறது.

சென்ற ஆண்டைவிட, இந்த ஆண்டில் வேர்க்கடலை மற்றும் தானியங்களின் விளைச்சல் குறைச்சலாக இருக்கலாம்; ஆனால், எந்தப் பகுதியிலும் பயிர்கள் முழுவதுமாகச் சாயந்து போய்விடவில்லை.

விருத்தாசலம் தாலுகாவிலுள்ள மங்கலூர் வட்டாரத்தில், வேலையில்லாமல் இருப்பவர்களைப் பற்றிக் கணக்கு எடுக்கும் வேலை முடிந்துவிட்டது; அடுத்த மாதம் இந்த வட்டாரத்தில், கிராமப்புற வேலை வாய்ப்புப் பரீட்சார்த்தத் திட்டம் தொடங்கப்படவிருக்கிறது."

பொதுப்பணித் துறை அமைச்சர்

எஸ்.ஜே. சாதிக் பாட்சா

நிகழ்ச்சிகள்

செ. 22 மாலை 5 மணி: சோலம்பாக்கம் -- கோட்டைப்பிஞ்சு சாலையைப் பார்வையிடுதல்; 6 மணி: தேன்பூந்தம் பாலம் அடிக்கல் நாட்டு விழா.

ஒளிமயமான எதிர்காலம் ஏற்படப் போவது உறுதி

குருதி சிந்தியும் மலராத சாதனைகள் இன்று உருவாகிவருகின்றன

ஏழை எளிய--பாட்டாளிகளின் பல ஆண்டுக்காலக் கனவுகள் கழக ஆட்சியில் நிறைவேறியே தீரும்

கும்பகோணம், செப். 20—
" ஆண்டுக்கு ஒன்றாக அல்ல -- திங்களுக்கு ஒன்றாக அல்ல--கிழமைக்கு ஒன்றிரண்டு சாதனைகள் தமிழ்நாட்டிலே இருக்கின்ற தாழ்த்தப்பட்ட மக்கள் -- பிற்படுத்தப்பட்ட மக்கள்- ஏழை எளிய நடுத்தர மக்கள் -- கிராமப்புறத்திலே இருக்கின்ற விவசாயத் தொழிலாள மக்கள் ஆகியோருடைய இல்லத்தைத் தேடி அவர்களுடைய உள்ளத்தைக் குளிரவைக்கின்ற அளவுக்குச் செயல்பட்டுவருகின்றன; அவைகளிலே ஒன்றுதான் இன்று நடைபெறும் விழவுக்குரிய சாதனையாகும்.

நம்முடைய வருவாய்த் துறை அமைச்சரும் -- உணவு அமைச்சரும், 'இதுபோன்ற சாதனைகள் நாட்டிலே நடைபெறுவதற்கு எவ்வளவு இரத்தம் சிந்த வேண்டியிருந்தது' என்பதை எடுத்துச் சொன்னார்கள்; 'அப்படி இரத்தம் சிந்திய காலத்திலெல்லாம் இந்தச் சாதனைகள் மலர்ந்தனவா' என்கின்ற கேள்வியினையும் கேட்டார்கள்.

இன்றைக்கு அமைதியான முறையில் -- இரத்தம் சிந்தாத அளவில் -- பெரிய பெரிய காரியங்களை ஏழை எளிய மக்களுக்காக நம்மால் சாதிக்க முடிகிறது; அதற்குக் காரணம், ஆளுகின்ற பொறுப்பிலே இருக்கின்றவர்கள் பல ஆண்டுக்காலமாக எந்த ஒரு கொள்கைக்காக எதிர்த்தரப்பிலே இருந்து வாதாடிவந்தார்களோ அதற்காக அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதும் -- தாங்களே சட்டமியற்றுகின்ற இடத்திற்கு வந்ததும்--அவைகளை நிறைவேற்றக்கூடிய வசதியையும் வாய்ப்பையும் பெற்றனர்; அந்தக் காரணத்தினாலேதான், எத்தனையோ ஆண்டுக்காலக் கனவுகள் நிறைவேற்றிவருகின்றனர்; தஞ்சை மாவட்டத்தில் ஏழை விவசாயத் தொழிலாளர்கள், தாங்கள் குடியிருக்கின்ற மனைகள் தங்களுக்குச் சொந்தமாக்கப்பட வேண்டும் --அந்த உடைமை தங்களுடைய உரிமையாக ஆக்கப்பட வேண்டும் என்று விடுத்த கோரிக்கைகள், அன்றைக்கே குப்பைத் தொட்டிக்குச் சென்று கொண்டிருந்தன; ஆனால் இன்று அந்தக் கோரிக்கைகள் எங்களுடைய இதயத்திலே ஏற்றுக்கொள்ளப்பட்டு--அவைகள் மக்கள் மத்தியில் நடமாட விடப்பட்டு--அந்தக் கோரிக்கையின் விளைவு களையும் கோரிக்கை விடுத்தவர்கள் அனுபவிக்கின்ற நிலைமையையும் தமிழக அரசு உருவாக்கியிருக்கிறது!

" குடியிருந்த இடம் ஒருவனுக்குச் சொந்தமாக்கப்படுகிறது: அந்த இடத்தினுடைய நீள, அகலம் என்ன -- அந்த இடத்தினுடைய மொத்த பரப்பளவு என்ன -- அந்த இடத்திலே போடப்பட்டுள்ள குடிசையின் பெறுமானம் என்ன -- அந்த இடத்திலே வாழ்கின்ற மனிதனின் தகுதி என்ன -- இவைகளையெல்லாம் மேட்டுக் குடியினர் பார்த்தாலோ அல்லது இந்தக் காரியங்களால் உற்சாகம் அடையாதவர்கள் பார்த்தாலோ -- 'ஐயோ, இந்தக் காரியங்களைப் பார்த்து மகிழ வேண்டியிருக்கிறதே' என்கின்ற மன எரிச்சல் கொள்கின்றவர்கள் பார்த்தாலோ அவர்களுக்குச் சர்வ சாதாரணமாகத் தோன்றலாம்.

ஆனால் எங்களுக்கு அந்தக் குடிசைகள்தான் கோயில்களாகத் தெரிகின்றன; அந்தக் குடிசைகளிலே இருக்கின்ற சாதாரண விவசாயத் தொழிலாளர்கள் அந்தக் கோயில்களிலே குடிகொண்டுள்ள தெய்வங்களாக எங்களுக்குத் தோன்றுகிறார்கள்; ஆகவேதான் அவர்களை நாங்கள் வழிபடுகிறோம் -- அவர்கள் வாழ்வதற்காக வழி விடுகிறோம்.

அந்த முயற்சியின் ஒரு கட்டமாகத்தான் குடந்தைத் திருநகரிலே இந்த விழா நடைபெறுகின்றது; 1,50,000-த்துக்கு மேற்பட்டவர்களுக்குக் குடியிருப்பு மனைகளை வழங்குகின்ற இந்த நிகழ்ச்சி -- அப்படி ஒன்றும் சாதாரணமான நிகழ்ச்சி அல்லதான்; ஆனால் இந்த நிகழ்ச்சியோடு ஏழை எளிய மக்களின் துயரம் தீர்ந்து விடுகிறதா என்றால், அதனை நான் ஒப்புக்கொள்ளமாட்டேன்.

ஒரு நாட்டின் குடிமகனுக்குத் தேவையானவை உணவு -- உடை -- உறையுள்; இந்த மூன்று தேவைகளும் நம் நாட்டிலே எல்லா மக்களுக்கும் நிறைவு செய்யப்பட்டு விட்டதா என்றால், இல்லை; அப்படிச் செய்யப்பட்டிருக்குமேயானால், 'வறுமையை வெல்வோம் அல்லது வறுமையை விரட்டுவோம்' என்கின்ற முழக்கங்கள் எல்லாம் இந்தக் காலத்திலே தேவைப்படாத முழக்கங்களாக ஆகிவிட்டிருக்கும்.

அந்த முழக்கங்கள் இன்னும் நம்முடைய செவிகளிலே ரீங்காரம் செய்வதிலிருந்து, 'நாம் இந்த நாட்டுக்குச் செய்யவேண்டியவைகளை முழு அளவிலே அவற்றை நிறைவேற்றி விட்டோம்' என்று மன ஆறுதல் கொள்கின்ற நிலையிலே இல்லை என்பதை உணர முடிகிறது.

ஆனாலும் இன்னும் இருபது ஆண்டுகளுக்கும் பிறகு -- ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு ஓர் ஒளிமயமான எதிர்காலம் வரப்போகிறது; இந்த நாட்டிலே இருக்கின்ற ஏழை எளிய மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்ற -- உதட்டு வார்த்தைகளை உச்சரித்துக் கொண்டிருக்கின்ற நிலையிலேயிருந்து நாம் நம்மைத் திருத்திக்கொண்டு, 'இன்றைக்கே நம்மால் செய்ய முடிந்தவைகளைச் செய்தாக வேண்டும்' என்று தமிழக அரசு முடிவெடுத்திருக்கிறது!"

—முதலமைச்சர் கலைஞர்

(குடந்தை பட்டா வழங்கு விழாவில்)

கங்கை -- காவிரி இணைப்பு -- நல்ல முடிவுக்கு அறிகுறி

மத்திய அமைச்சர் யோசனைக்கு முதல்வர் வரவேற்பு

ஐதராபாத்தில் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு விளக்கம்

ஐதராபாத், செப். 21—

" நாடு சுதந்தரம் பெற்றபோதே கங்கை -- காவிரி நதிகளை இணைக்கத் திட்டமிடப்பட்டிருந்தால், அந்தத் திட்டம் இப்போது முடிவடையும் நிலையை அடைந்திருக்கும்; மாநிலங்களிடையே நதி நீர்ப் பிரச்சினைகள் ஏற்பட்டிருக்காது "

என்று, முதலமைச்சர் கலைஞர் அவர்கள், ஐதராபாத்தில், செய்தியாளர்களிடையே கருத்தறிவித்தார்.

ஆந்திர மாநிலத்தின் தலைநகரான ஐதராபாத்திலுள்ள பத்திரிகையாளர் சழகத்தில் நடைபெற்ற செய்தியாளர்கள் கூட்டத்தில் முதலமைச்சர் கலைஞர் கலந்துகொண்டார்; பத்திரிகையாளர் கழகத்தின் தலைவர் சிதம்பரம் முதல்வரை வரவேற்றார்.

வரவேற்புக்குப் பின்னர், செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளும் -- முதலமைச்சர் அளித்த பதில்களும் வருமாறு :—

செய்தியாளர் :—" 'மாநிலங்களுக்கு இடையேயுள்ள பொதுவான ஆற்று நீர்ப் பிரச்னை, 'கங்கையையும் -- காவிரியையும் இணைத்து அதைப் பராமரிப்பதற்கு சுயேச்சையான வாரியம் ஒன்றிடம் ஒப்படைத்து விட்டால் இப்பிரச்னைக்குத் தீர்வு காண முடியும்' என்று மத்திய அமைச்சர் டாக்டர் கே. எல். ராவ் கூறியுள்ளாரே -- அதுபற்றி உங்கள் கருத்து என்ன ?"

முதல்வர் :—" கங்கையையும்— காவிரியையும் இணைப்பதன் மூலமாகக்கூட, மாநிலங்களுக்கிடையேயுள்ள தண்ணீர்ப் பிரச்னை நிச்சயமாகத் தீர்ந்துவிடக்கூடும் என்று நம்புகிறேன்; இந்தத் தொடக்கத்தைக்கூட நாடு சுதந்தரம் பெற்ற அந்தக் காலத்திலேயே செய்திருப்பார்களானால், ஐந்து அல்லது ஆறு ஆண்டுக் காலத்திலேயே கங்கை—காவிரி இணைப்பு முடிந்தே போயிருக்கும்; மாநிலங்களுக்கிடையே தண்ணீர்ப் பிரச்சினை எழுந்தே இருக்காது.

"டாக்டர் கே. எல். ராவ் கூறியிருக்கும் யோசனை சிலாக்கியமானது; தமிழ்நாடு அரசின் சார்பில் அவரிடம் நாங்கள், 'கங்கை -- காவிரி இணைப்புக்குக் கங்கையிலிருந்து தொடங்கிக் காவிரி வரையில் வரவேண்டும் என்பதற்குப் பதிலாக ஆங்காங்கு--மாநிலங்களிலுள்ள நதிகளை இணைத்தால் பிறகு கங்கையிலிருந்து காவிரி வரையில் இணைப்புக்குச் சுலபமாக இருக்கும்' என்று சொன்னோம்; அதை யோசிப்பதாக டாக்டர் கே. எல். ராவ் அவர்களும் சொன்னார்கள்: இன்றையச் செய்திகள், அதை யோசித்து நல்ல முடிவு எடுப்பதற்கான சூசகங்களாகவே தெரிகின்றன."

தமிழ் நாட்டிலா தொழில் அமைதி சீர்குலைவு?

கேள்வி:—" தமிழ்நாட்டில் கடந்த மூன்று ஆண்டுக் காலமாகத் தொழில் அமைதி கெட்டுவிட்டதாகச் சொல்கிறார்களே -- காரணம் என்ன ?"

முதல்வர்:—" இப்படி ஒரு தவறான பிரசாரம் நடத்தப்பட்டு வருகிறது; அப்படிச் சொல்லக் கூடிய அளவுக்கு அங்கு தொழில் அமைதி எதுவும் கெட்டுவிடவில்லை; இந்தப் பிரசாரத்தின் மூலம் தொழிலதிபர்கள் யாரும் பயந்துவிட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்."

செய்தியாளர் :—" இந்தப் பிரசாரத்தை ஏற்படுத்தியது யார்? பத்திரிகைக்காரர்களா -- அரசியல்வாதிகளா? யார் காரணம் ?"

முதல்வர் :—" இதற்கு இப்போதுள்ள அரசின் மேல் ஒரு சிலருக்கு ஏற்பட்டுள்ள அதிருப்தி காரணம்."

கருத்தை மாற்றிக் கொள்ளும் சூழ்நிலை ஏற்படவில்லை

செய்தியாளர் :—" கல்லூரிகளில் பயிற்சி மொழி தமிழ் என்றிருப்பதால், தொழில் -- விஞ்ஞானத் துறைகளில் தமிழில் பயிற்றுவிக்க முடியவில்லை என்று கருதுவதால் இப்பகுதியில் ஏதேனும் மாற்றம் செய்ய எண்ணம் உண்டா ?"

முதல்வர் :— " தமிழ் பயிற்சி மொழியாக வேண்டும் என்கின்ற கருத்தை மாற்றிக்கொள்கின்ற சூழ்நிலை இன்றைக்கு எங்கள் மாநிலத்தில் எழுவதற்கு நியாயமே இல்லை; உங்களுடைய கேள்வியிலேயே தமிழைப் பயிற்சி மொழியாக ஆக்குவதற்கு ஏற்ற வகையில் நல்ல பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தேவை என்பதை எடுத்துக்கூறியிருக்கிறீர்கள்; எனவே, நல்ல முறையில் பயிற்சி மொழியாக ஆக்குவதற்கு என்னென்ன காரியங்கள் செய்ய வேண்டுமோ அதைச் செய்வது உகந்தது என்பதுதான் என்னுடைய கருத்தாகும்."

இலட்சிய அளவில் வேறுபாடுகள் இருந்தாலும்...

செய்தியாளர் :— " நடைபெற்ற இடைத்தேர்தலில், மத்திய அரசில் இருக்கும் ஆளும் கட்சியை ஆதரித்தீர்கள்; அப்படியென்றால், சனநாயகத்தில் எதிர்க் கட்சிகளின் பங்கு என்ன ?"

முதல்வர்:—" தேர்தல் நேரத்தில், 'இந்தியாவில் முற்போக்குக் கொள்கைகள் வளர வேண்டும்' என்கின்ற ஆசையோடும் -- அதற்குத் தடைகள் வராமல் காப்பாற்றப்பட வேண்டும் என்கிற ஆசையோடும் மத்தியிலே இருந்த ஆளும் கட்சியைத் தி.மு. கழகம் ஆதரித்தது; ஆனால், இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற பல்வேறு சூழ்நிலைகள், மத்தியில் இருக்கின்ற ஆளும் கட்சிக்கும் -- தமிழ்நாட்டில் இருக்கிற தி. மு. கழகத்திற்கும் இலட்சிய அளவில் வேறுபாடு இருந்தாலும், அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் உறவு இருக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய ஆசையாகும்."

சனநாயகத்திற்கு இலக்கணம் அதுதான்

செய்தியாளர் :—" அப்படியென்றால், எதிர்க் கட்சி எவ்வாறு இயங்க வேண்டும் என்று தாங்கள் கருதுகிறீர்கள் ?"

முதல்வர் :—" எங்கள் மாநிலத்தில் -- நான் ஆளும் கட்சியைச் சேர்ந்தவன் என்ற முறையில் -- எல்லாக் கட்சிகளும் சுதந்தரமாகவும், கண்ணியமாகவும் செயல்பட வேண்டும் என்று கருதுகிறேன்; அதைப் போலவே, மத்தியில் இருக்கின்ற ஆளும் கட்சியும், 'எல்லா எதிர்க் கட்சிகளும் சுதந்தரமாகவும், கண்ணியமாகவும் செயல்பட வேண்டும்' என்று கருதினால், அதுவே சனநாயகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட இலக்கணமாகும்."

செய்தியாளர் :—" எதிர்க் கட்சிகளுடைய நோக்கமே ஆளும் கட்சியைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு தாங்கள் பதவிக்கு வருவதுதான்; அந்த உங்கள் கொள்கையை ஒப்புக்கொண்டால் நிலைமை என்ன ஆகும் ?"

முதல்வர் :—" சனநாயகத்தில் வளர்ந்து வருகின்ற காலம் நிச்சயம் அதற்குப் பதில் சொல்லும்."

உருது மொழிக்குப் பாதுகாப்பு

செய்தியாளர் :—" உங்கள் மாநிலத்தில் உருது மொழிக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது ?"

முதல்வர் :—" உருது மொழிக்கு மாத்திரமல்ல -- சிறுபான்மை மொழிகள் அனைத்துக்கும் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது."

தனி மனித வருமானம்-உயர்த்தும் பிரச்சினை

செய்தியாளர் :—" வடநாட்டிலிருந்து நிறைய அரசியல் பிரச்சினைகளைக் கேள்விப்படுகிறோம்; இருந்தாலும், பொருளாதாரத் துறையில தனி மனித வருமானத்தை உயர்த்துகின்ற வகையில் நீங்கள் பதவிக்கு வந்தபின் எடுத்துக்கொண்ட முயற்சிகளையும், அதனால் ஏற்பட்ட பலன்களையும் கூற முடியுமா ?"

முதல்வர் :—" இது, மாநில அளவில் நிர்ணயிக்கக்கூடிய ஒன்றல்ல என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள்; அகில இந்திய ரீதியில் செய்யப்பட வேண்டிய காரியங்கள் என்றாலும், மாநிலத் திட்டக் குழு அமைத்து -- அதன் மூலம் தனி நபர் வருமானத்தை அதிகப்படுத்துவதற்கான முயற்சிகளையும் அந்தத் திட்டக் குழு மேற்கொண்டிருக்கிறது."

ஒலிபரப்புத் துறையை மாநிலம் ஏற்கும் பிரச்சினை

செய்தியாளர் :—" ஒலிபரப்புத் துறையை மாநில அளவில் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற யோசனையைப் பற்றி என்ன சொல்லுகிறீர்கள் ?"

முதல்வர் :—" அப்படிப்பட்ட யோசனை எதனையும் இப்போது நான் தெரிவிக்கவில்லை; மத்தியில் இருப்பவர்கள் முன்வந்து இவைகளை மாநிலங்களே ஏற்றுக்கொள்ளலாம் என்று சொன்னால், வரவேற்கத் தயாராக இருக்கிறோம்."

செய்தியாளர் :—" இராசமன்னார் குழு அறிக்கையில் இப்படிப்பட்ட யோசனை இருக்கிறது; அதை நீங்கள் ஒப்புக்கொண்டிருக்கிறீர்கள் அல்லவா ?"

முதல்வர் :—" இராசமன்னார் குழுவைப் பொறுத்த வரையில். அந்தக் குழுவின் பரிந்துரைகள் அனைத்தையுமே முன்னேற்றக் கழகமோ -- கழக அரசோ ஏற்றுக்கொண்டதாக அர்த்தமல்ல; அதை ஆராய்வதற்கு முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஒரு துணைக் குழு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது; அதனுடைய பரிந்துரைகள் வந்த பின்னர்தான், அதைப் பற்றி முடிவான கருத்துக்களை நாங்கள் தெரிவிக்க முடியும் "

மாநில அளவில் திரைப்படத் தணிக்கைக் குழு

செய்தியாளர் :—" திரைப் படத் தணிக்கைக் குழு மாநில அளவில் இருக்கவேண்டும் -- மத்திய அளவில் இருக்கக்கூடாது என்று வலியுறுத்தினீர்களே -- இது எந்த நிலையில் பயனுள்ளதாக இருக்கும் என்று கருதுகிறீர்கள் ?"

முதல்வர் :—" இந்தியா ஒரு நாடு என்று நாம் ஒத்துக்கொண்டாலும் -- ஒருமைப்பாட்டில் நமக்கு இருக்கின்ற அக்கறையை நாம் வலியுறுத்திக் கொண்டிருந்தாலும், இந்த நாட்டிலுள்ள மாநிலங்களில் பல்வேறு கலாச்சாரங்கள் இருக்கின்றன; ஆகவே, தணிக்கைக் குழு அந்தந்த மாநிலத்திற்கு ஏற்ற வகையில் இருந்தால்தான், அந்தந்த மாநிலங்களுடைய கலாச்சாரங்கள் காப்பாற்றப்பட வழிபிறக்கும்."

செய்தியாளர் :—" ஆந்திரப் பிரதேசத்திற்குத் தனியாகத் தணிக்கைக் குழு அமைக்கப்படுமா ?"

முதல்வர் :—" என்னுடைய பதிலில் ஆந்திரப் பிரதேசமும் அடங்கியிருக்கிறது."

விருதை ஜெயராஜ்

நிகழ்ச்சிகள்

செப். 22: இராமநாதபுரம்; 23: அம்பாசமுத்திரம்; 24: சிவகாசி; 27: குளத்துசசேரி; 29: கன்னிராசபுரம்; 30: கரூர்.

அக். 1: புதுக்கோட்டை: 2: இடைப்பாடி.

பேச்சாளர் முகவரி :

விருதை ஜெயராஜ்,
அண்ணா பதிப்பகம்,
54, தபால் ஆபீஸ் தெரு,
விருதுநகர்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

23--9--72

சென்னை 3-வது வட்டம்

கலைஞர் கருணாநிதி நற்பணி மன்றச் சார்பில் இரவு 7-மணிக்கு இராயபுரம் சூரியநாராயண செட்டித் தெருவில் (காசிமேடு ஆல்பர்ட் மைதானம் எதிரில்); தலைவர்: கே. இராசு; மன்றப் பெயர்ப் பலகைத் திறப்பாளர்: இரா. மு. மனோகரன் எம்.சி.; பேசுவோர்: இளம்பரிதி, என். சீவரத்தினம், பொன்னுரங்கம், ஆடலழகன். அன்புரோசு, சு. இராமதாசு, மு. பாண்டியன் வி. பி. எம். ஏழுமலை (இரவு 10-மணிக்கு திரு. கைலாசம் தலைமையிலும் -- அங்கம்மன், சிவஞானம் ஆகியோர் முன்னிலையிலும் சேகர் குழுவினரின் 'சிரிப்பென்ன சிரிமபோ' எனும் நகைச் சுவை நாடகம் நடைபெறும்)

தாழ்த்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்

சத்தியவாணிமுத்து

நிகழ்ச்சிகள்

செப். 22 இரவு : வேலூர்.

செப். 23 காலை 9-30 மணி: ஆரணி; 10 மணி: பையூர்—மேல்நிலை தண்ணீர் தொட்டியைத் திறந்து வைத்தல்; 11 மணி: கல்பூண்டி—மேல்நிலை தண்ணீர்த் தொட்டியைத் திறந்து வைத்தல்; மதியம் 12 மணி: ஆரணி; மாலை 4 மணி: நெதபாக்கம்—மேல்நிலை தண்ணீர் தொட்டியைத் திறந்து வைத்தல்; 5 மணி: இரும்பேடு—அரிசன காலனியில் கட்டப்பட்ட வீடுகளை அரிசனங்களுக்குத் திறந்து வைத்தல்; 5-30 மணி: ஆரணி—நார்மன்ற வரவேற்பு; 6 மணி: ஆரணி நகராட்சிப் பேருந்து நிலையத்தில் கட்டப்பட்ட கடைகளைத் திறந்து வைத்தல்; இரவு 7 மணி: ஆரணியில் நடைபெறும் பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாப் பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ளுதல்.

மாதவன் வலியுறுத்தல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கை உறுதியற்றதாக இருப்பதால் தொழில் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது; ஆகவே, பொருளாதாரம் பற்றி திட்டவட்டமான முடிவை மத்திய அரசு எடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

அரசாங்கம் நடத்த வேண்டிய தொழில்கள் எவை -- தனியார், கூட்டுறவுத் துறைகள் நடத்த வேண்டிய தொழில்கள் எவை -- தனியாரும், அரசாங்கமும் இணைந்து நடத்தக்கூடிய தொழில்கள் எவை என்பவைகளையெல்லாம் மத்திய அரசு திட்டவட்டமாக அறிவிக்க வேண்டும்.

தொழில் மந்தத்துக்கு இதுதான் காரணம்

தொழிற்சாலைகளுக்குப் போதிய மூலப் பொருள் (கச்சாப் பொருள்) கிடைக்காதது தொழில் மந்தத்துக்கு இன்னொரு காரணமாகும்.

இப்போதுள்ள நடைமுறைப்படி கச்சாப் பொருள்களை வழங்குவதற்குப் பல நிறுவனங்கள் உள்ளன; சிறு தொழில்—நடுத்தரத் தொழில் – பெரிய தொழில் போன்ற 3 ரகத் தொழில்களுக்கும் கச்சாப் பொருள் வழங்குவதற்குப் பல அமைப்புகள் உள்ளன.

மாநில அரசுக்கு அந்த உரிமை தேவை

கச்சாப் பொருள் வழங்குவதில் ஊழல்கள் நிலவுகின்றன என்றும் குற்றஞ்சாட்டப்படுகிறது.

எனவே, எல்லா வகைத் தொழில்களுக்கும் கச்சாப் பொருள்களை வழங்கும்உரிமையை மாநில அரசுகளுக்குத் தர வேண்டும்; அப்படிச் செய்தால் தான், 'கச்சாப் பொருள் இருப்பு எவ்வளவு – தேவை எவ்வளவு' என்பதைச் சரியாகக் கணக்கிட்டு வழங்குவதற்கு இயலும்.

மாநில அளவில் நிலையான குழு அமைப்பது அவசியம்

தேசியமயமாக்கப்பட்ட பாங்கிகளுக்கும் – மாநிலத் தொழில் நிறுவனத்துக்கும் இணைப்புப் பாலமாக இருந்து பணிபுரிய மாநில அளவில் ஒரு நிலையான குழுவை அமைக்க வேண்டும்.

மாநிலத் தொழில் நிறுவனத்துக்குத் தேவையான நிதியை பாங்கியிலிருந்து உடனடியாகப் பெறுவதற்கு இந்தக் குழு உதவ வேண்டும்.

மாநில அரசின் தொழில்துறை, மத்திய தொழில் துறையுடன் பல சிரமங்களைச் சந்திக்க வேண்டியிருக்கிறது; அது மட்டுமல்ல – இருப்புத் துறை– வெளிநாட்டுத் துறை – நிதித் துறை – தொழிலாளர் நலத் துறை ஆகியவற்றுடனும், மாநிலத் தொழில் துறை பல பிரச்சினைகளில் தொடர்பு கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகிறது.

இந்தத் துறைகளுடன் மத்திய தொழில் துறையே தொடர்பு கொண்டு, பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதில் மாநிலத் தொழில் துறைக்கு உதவ முயற்சிக்க வேண்டும்."

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, [illegible] இட்டு வெளியிடப்படுகிறது.